பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 27 | திங்கட்கிழமை | 11.03.2024 | அதிர்வு 223

இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த

## 400 கிலோ கஞ்சா தமிழகத்தில் மீட்பு

(ந.லோகதயாளன்)



இலங்கைக்குக் கடத்துவதற்காக இறால் பண்ணையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 400 கிலோ 07


# துஷ்டனாக வாழ்ந்த கோட்டா துரத்தப்பட்டமை தண்டனை!

## அது சதி அல்ல என்கிறார் நீதியரசர் விக்னேஸ்வரன்

'போர்க் காலத்தின் போதும், அரசியலில் ஈடுபட்ட காலத்தின் போதும் கோட்டாபய ராஜபக்ஷ துஷ்டனாகவே வாழ்ந்து வந்துள்ளார். துஷ்டர் ஒருவரை சிங்கள இளைஞர், யுவதிகள் பதவியில் இருந்து நீக்கினார்கள் என்பதுதான் உண்மை. அது சதி அல்ல. தண்டனை. அடித்துத் துரத்தப்பட வேண்டிய ஒருவர் என்று சிங்கள மக்களால் அடையாளம் காணப்பட்ட ஒருவரே அவர்களால் விரட்டப்பட்டார்.' 06







# நாட்டை முன்னேற்ற மீண்டும் ஐ.தே.கவுடன் இணையுங்கள்

## கட்சியின் முதலாவது பொதுக் கூட்டத்தில் சஜித் அணியினருக்கு ஜனாதிபதி அழைப்பு

நாட்டைக் கடன் சுமையில் இருந்து காப்பாற்றி, எதிர்காலச் சந்ததிக்காகப் பாதுகாப்பான நாட்டைக் கட்டியெழுப் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையுங்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியினருக்கு அழைப்பு விடுத்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

குளியாப்பிட்டிய மாநகர சபை மைதானத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டுக்காக ஒன்றுபட்டு உழைக்க விரும்பும் மக்களின் சந்திப்பான இந்தப் பொதுக் கூட்டம் "நிதர்சனம்" என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோடு, இந்த முதலாவது பேரணியில் பெருந்திரளான மக்கள் 07

ஐ.எம்.எவ். பிரதிநிதிகளுடன் கலந்துரையாட விடுத்த

# ஜனாதிபதியின் அழைப்பை ஏற்றது தமிழ்க் கூட்டமைப்பு

## சம்பந்தன் பங்கேற்பார் என்கிறார் சிறீதரன்



சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுமாறு எதிர்க்கட்சிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். 07




'இது என்னடா மதுரைக்கு வந்த சோதனை...?' என்ற மாதிரிப் பிரச்சினை சிறீதரன் எம்.பிக்கு.

நீதிமன்றத்தில் போய் சிக்கியிருக்கும் தமிழரசுக் கட்சிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இடையில் அதையொட்டி புதிய புதிய சிக்கல்கள்....!

அந்த வரிசையில் ஒன்றைக் கிளப்பி விட்டிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்ற ஆதங்கம் போலும் சிறீதரனுக்கு.

சர்வதேச நாணய நிதியத்தின் 06






# பதவி ஆசை எனக்கு இல்லை பதவி என்னைத் தேடி வந்தது

## ஐ.தே.க. பொதுக் கூட்டத்தில்; ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

"நாடு நெருக்கடியில் சிக்கித் தவித்த 2022ஆம் ஆண்டில் பிரதமர் பதவியையோ அல்லது ஜனாதிபதிப் பதவியையோ பெறும் ஆசை எனக்கு இருக்கவில்லை. அந்த ஆண்டில் அந்தப் பதவிகள் என்னைத் தேடி வந்தன. இதுதான் உண்மை."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

குளியாப்பிட்டிய மாநகர சபை மைதானத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:–

"இந்த மைதானத்தில் இன்று ஏராளமானோர் குவிந்துள்ளனர். கடினமான காலங்களில் நீங்கள் அனைவரும் எனக்கு வழங்கிய ஆதரவுக்கு உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். அந்த இக்கட்டான காலகட்டம் முடிவடையும் போது முன்னோக்கிச் செல்வதற்கு தேசிய கருத்தொருமைப்பாடொன்றை ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது.

எங்கள் முன்னிலையில் இன்னும் சில சவால்கள் இருக்கின்றன. குறுகிய அரசியல் வேறுபாடுகள் இன்றி நாம் அனைவரும் ஒன்றிணைந்து முன்னேறிச் செல்ல வேண்டும்.

நான் அரசைப் பொறுப்பேற்ற போது, நாட்டை இந்த நிலைக்கு கொண்டு வர முடியும் என நான் எதிர்பார்க்கவில்லை. இன்று நாம் வங்குரோத்து நிலையில் இருந்து விடுவிக்கப்பட உள்ளோம். இதற்கு குறைந்தது ஐந்து வருடங்கள் ஆகும் என்று பலர் நினைத்தார்கள். சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இங்கு வந்துள்ளனர். அவர்களுடனும் உத்தியோகபூர்வ கடன் வழங்கிய நாடுகளுடனும் பேச்சு நடத்தியே அல்லது ஜூன் மாதத்தில் முதல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட எதிர்பாரக்கிறோம். அதன் பிறகு, வங்குரோத்தற்ற நாடாக, சலுகைகளைப் பெற முடியும்.

இந்தப் பயணத்தில் மக்களுக்கு நிவாரணம் வழங்க முடிந்தது. மேலும், இந்த ஆண்டு அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க முடிந்துள்ளது. அவர்களுக்கு இந்த சிங்கள – தமிழ்ப் புத்தாண்டுக்கு முதல் பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு கிடைக்கும். மேலும் அஸ்வெசும திட்டத்தின் கீழ் சமுர்த்தியை விட மூன்று மடங்கு நன்மைகள் வழங்கப்படுகிறது. எதிர்காலத்தில் 24 இலட்சம் பேருக்கு அந்த நன்மைகள் கிடைக்கும்.

இந்த சிங்கள – தமிழ்ப் புத்தாண்டில் அந்தக் அனைத்து குடும்பங்களுக்கும் 20 கிலோ அரிசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

மேலும், காணி அனுமதிப் பத்திரம் உள்ள அனைவருக்கும் நிரந்தர காணி உரித்து வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். கொழும்பில் 50 ஆயிரம் அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்கு சட்டபூர்வ உரிமைகள் வழங்கப்படும். இக்கட்டான காலங்கள் இருந்தபோதிலும் மக்களுக்கு நிவாரணம் வழங்கி, புரட்சியை உருவாக்க நாங்கள் பாடுபட்டு வருகின்றோம். மேலும், விவசாய நவீனமயமயப்படுத்தி, 10 ஆண்டுகளில் ஏற்றுமதி மூலம் வருமானம் ஈட்ட எதிர்பார்க்கிறோம்.

மேலும் இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான ஆணைக்குழுவை உருவாக்கியுள்ளோம். அதன் பணிகளில் நான் தலையிடவில்லை. தவறு செய்வர்களுக்கு எதிராக வழக்கு தொடர முடியும். அது எனக்கு பிரச்சினையும் இல்லை. மேலும் நாடாளுமன்றக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. பெண்களுக்கு அதிகாரமளிக்கும் சட்டமூலம் மற்றும் பாலின சமத்துவ சட்டமூலம் ஆகியவற்றை கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்த தற்போதைய சட்டங்களைத் திருத்தவும் ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தனிப் பிரிவு ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இவை நாட்டின் சாதாரண மக்களின் வளர்ச்சிக்காக செய்யப்பட்டவை.

நான் ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்றதன் பின்னர் எனக்கு ஆதரவளித்த ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், கட்சி பேதமின்றி எனக்கு ஆதரவளித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய அனைத்து கட்சி உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எங்களிடம் குறுகிய அரசியல் நோக்கமில்லை. இந்த நாட்டைக் கட்டியெழுப்ப நாம் கடுமையாக உழைக்க வேண்டும்.

2020 நாடாளுமன்றத் தேர்தலின் போது நாங்கள் பிளவுபட்டோம். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி என்ற ரீதியில் உண்மையைச் சொல்லி முன்னோக்கிச் செல்வோம் என அன்று நான் கூறினேன். திட்டமிட்டு செயற்பட்டால் குறுகிய காலத்தில் ஆட்சிக்கு வர முடியும் என சுட்டிக்காட்டினேன். ஆனால், பலர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். தேர்தலில் வெற்றி பெற, பொய்யான வாக்குறுதிகளை அளிக்க வேண்டும் என்று சிலர் நினைத்தனர்.

இந்தக் கருத்தினால் ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபட்டது. சிலர் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்தனர். சிலர் வாக்களிக்காமல் புறக்கணித்தனர். சிலர் எங்களுக்கு வாக்களித்தனர். இன்று ஒரே ஒரு கட்சிதான் இருக்கின்றது. அதுதான் ஐக்கிய தேசியக் கட்சி. டி.எஸ்.சேனாநாயக்க சுதந்திரம் பெற்றுக் கொடுத்த நாட்டைப் பாதுகாப்பதற்கும் ஜே.ஆர். ஜெயவர்தன உருவாக்கியது பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காகவும் நாம் முன்வந்துள்ளோம். அதற்காகத் தான் உங்கள் ஆதரவைக் கோருகின்றேன்.

ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சியிடமும் திட்டம் இல்லை. இந்த நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த போது, பொருளாதாரம் வீழ்ச்சியடைவதை அனுமதிக்க கூடாது என்று நினைத்தேன். எனவே, சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநரிடம் பேசினேன். எங்களுக்கு உதவ விரும்புவதாக அவர் தெரிவித்தார். உலக வங்கியும் இதனைத்தான் சொன்னது. நான் இரண்டு முறை ஜனாதிபதியை (கோட்டாபய ராஜபக்ஷ) சென்று சந்தித்தேன். 03



# பதவி ஆசை எனக்கு இல்லை பதவி என்னைத் தேடி வந்தது

## ஐ.தே.க. பொதுக் கூட்டத்தில்; ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தத் தகவல்களை அவருக்கு முன்வைத்தேன். ஆனால், துரதிஷ்டவசமாக சில அதிகாரிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அடுத்து 2022 மே 9ஆம் திகதி என்ன நடந்தது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகினார். பிரதமர் பதவியை ஏற்க முடியாது என சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். அநுரகுமார திஸாநாயக்க அந்தப் பதவியை கோரவில்லை. அவர்கள் யாரையும் நான் குற்றம் சொல்லவில்லை. மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் அவர்கள் எப்படி பிரதமர் பதவியை ஏற்க முடியும்? காலிமுகத்திடலுக்கு கூட அவர்களால் செல்ல முடியவில்லை.

அன்றைய தினம் ஷங்ரிலா ஹோட்டலில் நடைபெற்ற ரஞ்சித் சியம்பலாபிட்டியவின் மகளின் திருமண விழாவில் நான் கலந்து கொண்டிருந்தேன். நான் ஹோட்டலுக்குள் இருப்பது வெளியில் இருந்த அனைவருக்கும் தெரியும். யாரும் வந்து என்னை வெளியேறுமாறு சொல்லவில்லை. அதன் பின்னர் நான் கிளம்பினேன். கொம்பனித்தெரு பகுதியில் இருந்தவர்களிடமும் பேசிவிட்டு தான் நான் சென்றேன். ஏனென்றால் நாங்கள் எப்போதும் உண்மையைத்தான் கூறினோம். மக்களை ஏமாற்றவில்லை. தோல்வியை ஏற்க தயாராக இருந்தோம்.

பின்னர், பொதுஜன பெரமுன பின்வரிசை எம்.பி.க்கள் என்னைச் சந்தித்து ஜனாதிபதி பதவியை ஏற்குமாறு அழைப்பு விடுத்தனர். நான் பிரதமராக பதவியேற்றேன். இதை ஏற்றுக் கொள்ள வேறு யாரும் முன்வரவில்லை. மொட்டுக் கட்சி ஏற்க முடியாது. சஜித், அநுர ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. மேலும், சம்பந்தன் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், அவரால் அதை ஏற்க முடியாது. எனவே, பிரதமர் பதவியை ஏற்றேன். முடிந்தால் எதிர்க்கட்சிகளை ஒன்று திரட்டுங்கள் என்று முன்னாள் ஜனாதிபதியிடம் கூறினேன். ஆனால், அவர்கள் அதனை விரும்பவில்லை.

நிதி அமைச்சர் என்ற முறையில் சர்வதேச நாணய நிதியத்திடம் பேசினேன். அதன் ஆதரவு கிடைத்தது. இந்தநிலையில்தான் 2022 ஜூலை 9ஆம் திகதி இந்தச் சம்பவம் நடந்தது. அந்த எதிர்ப்பு முன்னாள் ஜனாதிபதியை பதவி நீக்க நடந்ததா அல்லது என்னைப் பதவி நீக்க நடந்ததா என்று தெரியவில்லை. எவ்வாறாயினும், ஜனாதிபதி மாளிகை சுற்றிவளைக்கப்பட்டபோது முன்னாள் ஜனாதிபதி பதவியை விட்டு வெளியேறினார். எனது வீட்டுக்குத் தீ வைக்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி வழங்கிய பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டேன்.

நான் அரசகட்டடமொன்றில் பதில் ஜனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்வதற்கு அரச அதிகாரிகள் அஞ்சினார்கள். ஆனால், விகாரையில் நான் பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்றேன்.

நான் தேர்தலுக்குச் செல்ல நினைத்தேன். ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள அனைவரும் எனக்கு ஆதரவளிப்பார்கள் என்று நினைத்தேன். அரசை அமைத்து முன்னேற முடியும் என்று கருதினேன். அவர்கள் உடன்படவில்லை. சிலர் மாத்திரம் அமைச்சுப் பதவிகளை ஏற்றனர். திரும்பி வந்த அமைச்சர்கள் மனுஷ மற்றும் ஹரீன் ஆகியோரை வரவேற்கின்றேன்.





டலஸ் அழகப்பெருமுக்கு ஆதரவளிப்பதாகச் சிலர் தெரிவித்தனர். ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவருக்கு ஜனாதிபதி பதவி வழங்க முடியாது என ஜி.எல்.பீரிஸ் எனக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்க முடியாது என சஜித் பிரேமதாஸவும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து கொண்டன.

இந்தப் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் காப்பாற்ற அனைவரிடமும் உதவி கேட்டேன். மஹிந்த ராஜபக்ஷவிடம் நான் பேசியபோது, சர்வதேச நாணய நிதியத்துடன் ரணில் மட்டுமே பேச முடியும், அதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார். மஹிந்த ராஜபக்ஷ உகந்தவரல்ல என்று சொல்பவர்கள் அன்று அவரை நாடிச் சென்று ஆதரவு கேட்டனர். நான் அவரிடம் தொலைபேசியில்தான் பேசினேன். எனவே, பொய்யைப் பரப்ப வேண்டாமென ஐக்கிய மக்கள் சக்திக்குக் கூறுகின்றேன். ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு அந்தக் கட்சியில் இடமில்லை.

கடந்த 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விசேட அறிவிப்பொன்றை விடுத்த போது, கடன் மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடல்களில் தங்களையும் இணைத்துக்கொள்ளுமாறு ஹர்ஷ டி சில்வா கோரிக்கை விடுத்தார். அந்தக் கலந்துரையாடலில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் பங்கேற்பார்கள் என்று நான் கூறினேன். அதன்படி திங்கட்கிழமை (இன்று) எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்து இது குறித்து ஆராய்வதற்காகக் கடிதங்களை அனுப்பினோம். அப்போது ஹர்ஷ சொல்வது போன்று செயற்பட முடியாது எனப் பண்டிதர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவரிடம் கூறியுள்ளார். நான் சொல்வதைச் செய்ய வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்க மாட்டோம் என எனது செயலாளருக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர். பண்டிதரின் பேச்சுக்கு அந்தக் கட்சி கட்டுப்பட்டுள்ளது. எனவே, இந்தக் கட்சியில் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு இடமிருக்கின்றதா?அந்தக் கட்சியில் அனைவரும் இன்று ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

நிதி தொடர்பான முதன்மையானவர் ஓரங்கட்டப்பட்டபோது எவ்வாறு நம்பிக்கை வைக்க முடியும். இன்று ஐக்கிய மக்கள் சக்தி சிறு தரப்பினரிடம் சிக்கியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகள் அங்கு இல்லை. எனவே, எமக்கு வாக்களித்த மற்றும் வாக்களிக்காத அனைத்து உறுப்பினர்களுக்கும் எம்முடன் இணையுமாறு அழைப்பு விடுக்கின்றேன். இந்த நாட்டைக் கடனில் இருந்து காப்பாற்றுவோம். அதற்காக ஒன்றிணைந்து செயற்படுவோம்.” – என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் ருவன் விஜேவர்தன, தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க, தவிசாளர் வஜிர அபேவர்தன, பொதுச்செயலாளர் பாலித ரங்க பண்டார, முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கொழும்பு மாவட்டத் தலைவர் ரவி கருணாநாயக்க, அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோரும் உரையாற்றினர்.

# விமான ஓடுதள விஸ்தரிப்புக்காக காணிகளைச் சுவீகரிக்கத் தீர்மானம்

## யாழில் ஒத்துக்கொண்டார் சாகல









(பிரபாகரன் டிலக்சன்)

"பலாலி விமான நிலையத்தைச் சூழ உள்ள பகுதிகளில் விமான ஓடுதள விஸ்தரிப்புக்காக சில காணிகளைக் கையகப்படுத்தவுள்ளோம். அதனைச் சூழ சிறு தானிய பயிர்ச்செய்கையை மேற்கொள்ள விமானப்படையினர் அனுமதி கோரியுள்ளனர். ஜனாதிபதியின் யாழ். வருகையின்போது அதற்கான அனுமதியை வழங்குவதற்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்."

– இவ்வாறு ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள 110 ஏக்கர் காணிகளை உத்தியோக பூர்வமாக பொதுமக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யுத்த காலத்தில் தேசிய பாதுகாப்பு காரணங்களுக்காக முப்படை மற்றும் பொலிஸாரால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மக்களின் காணிகள் கையகப்படுத்தப்பட்டன. மேலும் அரச திணைக்களங்களான வனஜீவராசிகள் மற்றும் வனவள திணைக்களங்களின் கட்டுப்பாட்டின் கீழ் அதிகளவான காணிகள் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்ததன் பிற்பாடு 2013ஆம் ஆண்டில் இருந்து மக்களிடம் காணிகளைக் கையளிக்கும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுவந்தது. எனினும், நாட்டில் இன்னமும் விடுவிக்கப்படாமல் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் மக்களின் காணிகள் முப்படை மற்றும் பொலிஸார் வசம் உள்ளன. எனினும், இந்த 5 ஆயிரம் ஏக்கர் காணிகள் தேசிய பாதுகாப்புக்கு மிகவும் தேவையான காணிகளாகவும் அதேபோல் மக்களுக்கும் தேவையானதாகவும் உள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு நாட்டைப் பொறுப்பெடுத்தபோது நாடு வங்குரோத்து நிலையில் இருந்தது. அதனால் அரசு முதலில் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை பற்றி அக்கறை செலுத்தியது. அதன் பின்னர்தான் மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் அக்கறை செலுத்தியது.

காணிகளை விடுவிப்பது தொடர்பில் முப்படைகளைச் சேர்ந்த உயர்மட்டக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழுவை குறித்த காலவரைக்குள் காணிகளை விடுவிப்பது தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கோரியுள்ளார். அந்தக் குழுவின் ஆரம்பகட்ட அறிக்கை கிடைத்துள்ளது. அதனை ஆராய்ந்து அடுத்த கட்ட முடிவுகள் எடுக்கப்படும்.

மேலும் தேசிய பாதுகாப்புக்கு மிகவும் தேவையான சில காணிகள் தொடர்ந்தும் முப்படைகளின் கட்டுப்பாட்டிலே இருக்கும். அந்தக் காணிகள் மக்களுக்கும் தேவையானது என எமக்குத் தெரியும். எனவே, தொடர்ந்தும் கையகப்படுத்தப்பட்டிருக்கும் காணிகளுக்குரிய இழப்பீடுகளை வழங்கவும் தயாராகவுள்ளோம்.

கீரிமலை ஜனாதிபதி மாளிகை காணியை தகவல் தொழிநுட்பக் கற்கைகள் தனியார் பல்கலைக்கழகத்துக்கு வழங்கும் நடவடிக்கையை எடுத்துள்ளோம். அப் பல்கலைக்கழகம் சர்வதேச பல்கலைக்கழகத்தோடு இணைந்து மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

மேலும் ஜனாதிபதி மாளிகை தவிர்ந்த அனைச் சூழவுள்ள மக்களின் காணிகளை விடுவிக்கவுள்ளோம். குறித்த தனியார் பல்கலைக்கழகத்துக்கு மேலதிகமாக காணிகள் தேவைப்படின் அதனைச் சூழ உள்ள காணி உரிமையாளர்களுடன் கலந்துரையாடி குறித்த தனியார் பல்கலைக்கழகத்தினர் காணிகளை விலைக்கு வாங்க முடியும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இதன்போது முப்படைகள் வசம் உள்ள மக்களின் காணிகளைப் பார்வையிடவுள்ளார். மேலும் விடுவிக்கப்பட்ட காணிகளை மக்கள் எவ்வாறு பயன்படுத்துகின்றார்கள் எனவும் ஆராயவுள்ளார்.

பலாலி விமான நிலையத்தைச் சூழ உள்ள பகுதிகளில் விமான ஓடுதள விஸ்தரிப்புக்காகச் சில காணிகளைக் கையகப்படுத்தவுள்ளோம். அதனைச் சூழ சிறு தானிய பயிர்ச்செய்கையை மேற்கொள்ள விமானப் படையினர் அனுமதி கோரியுள்ளனர். ஜனாதிபதியின் யாழ். வருகையின்போது அதற்கான அனுமதியை வழங்குவதற்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

யுத்த காலத்தில் இடம்பெயர்ந்தவர்களின் வீடுகளைத் தற்போது மீளக் கட்டிக்கொடுப்பது தொடர்பான பிரச்சினையும் நிலவி வருகின்றது. அதனை நிவர்த்தி செய்ய வேண்டிய கடப்பாடும் எமக்கு உண்டு. அப்பிரதேச மக்களின் பொருளாதார நிலை தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளோம். எனவேதான் இப் பிரதேசத்தில் தகவல் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை நிறுவுவதில் கவனம் செலுத்தியுள்ளோம்.

இந்திய இழுவைப் படகுகளால் வடக்கு மீனவர்கள் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர் என்று கடற்றொழில் அமைச்சர் எனக்குத் தெரிவித்திருந்தார். கடற்படையினர் தமக்கு வழங்கப்படும் கட்டளைகளை நிறைவேற்றி வருகின்றனர். எனவே, கடற்படையை வைத்து இந்திய – இலங்கை மீனவர் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இதனை இராஜதந்திர ரீதியாகவே அணுக வேண்டும்.

மீனவர் பிரச்சினை தொடர்பில் இந்திய – இலங்கை உயர்மட்டப் பேச்சுகள் நீண்டகாலமாக இழுபறியில் உள்ளன. எனவே, மிகுந்த அக்கறையுடன் அந்தப் பேச்சை மீண்டும் தொடர வேண்டும்.

இழுவைமடி மீன்பிடி முறையால் இலங்கைக்கும், இலங்கைக் கடற்பரப்புக்கும் மிகுந்த பாதிப்பு உள்ளது. இழுவைமடி மீன்பிடி முறைமை என்பது சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத மீன்பிடி முறைமையாகும். இதனால் கடலின் வளம் முழுமையாகச் சுரண்டப்படுகின்றது. மேலும், எமது மீனவர்களின் வலைகள், சொத்துக்கள் அழிவடைகின்றன. எனவே, இது தொடர்பில் இராஜதந்திர மட்டக் கலந்துரையாடல் மூலம் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும்." – என்றார்.

# வெடுக்குநாறிமலையில் எமது வழிபாட்டுரிமையை மீறி எங்கள் நிலையை உலகுக்கு வெளிப்படுத்தியது அரசு!

## யாழ்.பல்கலைக்கழக இந்து மன்றம் கண்டன அறிக்கையில் தெரிவிப்பு






வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் அடிப்படை வழிபாட்டு உரிமையை மீறிய செயல் மூலம் உலகுக்கு எமது நிலையை அரசு வெளிப்படுத்தி இருக்கிறது.

இந்த அடிப்படையிலே சைவர்களுடைய வழிபாட்டில் இவ்வாறான அசம்பாவிதங்கள் நடைபெற்றன என்பது உண்மையில் சைவர்களாகிய ஒவ்வொருவரையும் மிகவும் மனரீதியாக வேதனைப்பட வைக்கிறது.

வெடுக்குநாறி மலை ஆதி இலிங்கேஸ்வரர் கோவிலில் நடைபெற்ற மோசமான வழிபாட்டுரிமை மீறல் மற்றும் மனித நேயமின்மை சம்பவங்களை மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். கைது செய்ப்பட்ட பக்தர்களை விடுவிக்ககோரியும் வலியுறுத்தி நிற்கின்றோம்.

– யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றம், வெடுக்கு நாறி மலை ஆதி லிங்கேசுவரர் கோவிலில் மகா சிவராத்திரி தினத்தில் இடம்பெற்ற பொலிஸ் அராஜகங்களைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் ஜோதியான சிவபெருமானுக்கு உரிய விரதங்களுள் தலையாய விரதமே மகா சிவராத்திரி. வருடத்தில் ஒருமுறை வரும் இந்த விரதத்தில் ராத்திரி வேளை நான்கு சாம பூசைகளை மேற்கொண்டு இரவு முழுவதும் சிவனடியார்கள் கண்விழித்து சிவபெருமானை பூஜித்து சிவசிந்தையில் வழிபாடு மேற்கொள்வது மரபாகும்.

இந்த மகாசிவராத்திரி தினத்திதை முன்னிட்டு தொன்றுதொட்டு தமிழ்ச் சைவர்கள் வழிபட்டுவரும் வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் கோவில் மகா சிவராத்திரி தின விசேட பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு நீதிமன்றம் வழங்கிய கட்டளையின் படி பூசை வழிபாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டன.

இந்த நிலையில் ஆலய பூசகர், வழிபாட்டில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொது மக்களைப் பலவந்தமாக அகற்றியுள்ளனர். மாலை ஆறு மணியளவில் அங்கிருந்து அனைவரையும் வெளியேறுமாறு பணித்துள்ளனர்.

சைவர்களின் வழிபாட்டு உரிமையையும், சைவ விழுமியங்களையும், புனிதச் சடங்குகளையும் அவமதிக்கும் சம்பவங்கள் தமிழர்களின் தொன்மையான புனித பூமியில் இடம்பெற்றிருக்கின்றன.

அதன் உச்சக் கட்டமாக வெகுதூரத்தில் இருந்து வந்து விரதமிருந்து பூசை வழிபாட்டில் ஈடுபட்டிருந்த பக்தர்களது வழிபாடுகளை தடுத்தும், வழிபாட்டில் ஈடுபட்ட பெண்களைக் கழுத்தைப் பிடித்து இழுத்து வீசியதுடன், தவறேதும் செய்யாத சிவனடியார்கள் விரதமிருந்து பூசையில் ஈடுபட்ட தருணம் மோசமாகக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சப்பாத்துக் கால்களுடன் வழிபாட்டு இடத்துக்குள் நுழைந்து பூசை மற்றும் படையல் பொருள்களையும் பொலிஸார் காலால் அப்புறப்படுத்தியுள்ளனர். கோவிலில் நிகழ்ந்து கொண்டிருந்த யாகத்தையும் தடுத்து நிறுத்தியுள்ளனர். பொலிஸாரது இந்த மிலச்சத்தனமான செயலானது மிகவும் கண்டிக்கத்தக்கது.

ஆலய வளாகத்துக்குக் குடி தண்ணீர் தாங்கியை உள்ளே அனுமதிக்கவில்லை. வழிபாட்டுக்குச் சென்ற சிறுவர்கள், பெண்கள், பக்தர்கள் என பலர் அவதிப்பட்ட நிலையில் ஆலய வழிபாட்டுக்காகப் பக்தர்களின் தாகசாந்திக்கு கொண்டுவரப்பட்ட நீர் தாங்கியை பொலிஸாரால் ஆலயத்தில் இருந்து மூன்று கிலோ மீற்றருக்கு முன்னரே தடுத்து நிறுத்தி வைத்துள்ளனர். இது இலங்கைப் பொலிஸாரது மனிதநேயமின்மையை ஒட்டுமொத்தமாகக் காட்டுகிறது.

இலங்கையில் சமய நல்லிணக்கம் வலியுறுத்தப்பட்டு வரும் சூழலில் இந்தச் செயற்பாடுகள் இடம்பெற்றிருப்பது மத நல்லிணக்கம் தொடர்பான ஐயப்பாடுகளை ஏற்படுத்துவதாக உள்ளது.

சமயங்கள் மனிதனை அக ரீதியாக மேம்படுத்தக்கூடியன. வழிபாடுகளும் இறை சார்ந்த நம்பிக்கைகளும் மனிதனை மனிதனாக பக்குவப்படுத்துகின்றனவே தவிர ஒரு மதத்தை மத வழிபாடடை நிந்திப்பதோ நிந்தனை செய்வதோ அல்லது தடுத்து நிறுத்துவதோ பொருத்துமற்ற ஒன்றாகவே கருதப்படும். சமயங்கள் சார்ந்த அரசியல் என்பது மக்களை முரண்பட்டுக் கொள்ளவும் இன ரீதியாகப் பிளவுபடுத்திக் கொள்ளவும் வழிசமைக்கும்.

ஆகவே சமயங்கள் மனிதர்களை பக்குவப்படுத்திக் கொள்வது எனும் வகையில் ஒவ்வொரு இனம் சார்ந்தவர்களும் பல்வேறுபட்ட நம்பிக்கைகளுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

அவர்களுடைய நம்பிக்கைகள், வழிபாடுகள், வழிபாட்டுத்தலங்கள் சிதைக்கப்படுவதோ அல்லது அவர்களுக்கான வழிபாடுகள் மறுக்கப்படுவதோ, ஒரு சுதந்திரத்தன்மை என்பது வழிபாட்டு முறையில் தடுக்கப்படுகிறது என்பது தான் அர்த்தமாக கருதப்படும்.

இந்த அடிப்படையிலே சைவர்களுடைய வழிபாட்டில் இவ்வாறான அசம்பாவிதங்கள் நடைபெற்றமை என்பது உண்மையில் சைவர்களாகிய ஒவ்வொருவரையும் மிகவும் மனரீதியாக வேதனைப்பட வைக்கிறது.

அவர்களுடைய வழிபாடுகளை சிதைப்பதனூடாக ஓர் இனத்தினுடைய பண்பாட்டு அடையாளங்களை கேள்விக்குட்படுத்துதல் என்பது உண்மையிலே ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவே இருக்கிறது.

இந்த அடிப்படை வழிபாட்டுரிமையை மீறும் செயலின் மூலம் உலகுக்கு எமது நிலையை இந்த அரசு வெளிப்படுத்தி இருக்கிறது.

வெடுக்குநாறி மலை ஆதி இலிங்கேசுவரர் கோவிலில் நடைபெற்ற மோசமான வழிபாட்டுரிமை மீறல் மற்றும் மனித நேயமின்மை சம்பவங்களை மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். கைது செய்ப்பட்ட பக்தர்களை விடுவிக்ககோரியும் வலியுறுத்தி நிற்கின்றோம்.

இலங்கை பொலிஸாரது அட்டூழியங்களையும், இலங்கை அரசின் இவ்வாறான செயலை இந்து மன்றம் கண்டித்து நிற்கின்றது.– என்றுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பிரதிநிதிகளுக்கும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுக்குமான கூட்டம் என்ற பெயரில் இன்று நடைபெறவிருக்கும் சந்திப்புக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவுக்கும், ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தியின் தலைவர் என்ற பெயரில் அனுரகுமார திஸநாயக்காவுக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் என்ற பெயரில் சிறீதரனுக்கும் அழைப்பை அனுப்ப ஏற்பாடு செய்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளை கையாளும் தரநிலையில் சிறீதரன் உள்ளாரா என்பது வேறு விடயம். இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு அந்தக் கூட்டத்துக்குப் போனால், தமிழரசு கட்சியின் தலைவர் என்ற பொறுப்பில் அவர் செயல்படுகின்றார் என யாரேனும் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்துவிட்டால் என்ன செய்வது என்ற சிக்கல் சிறீதரனுக்கு.

அதனால் மெல்ல அழைப்பை சம்பந்தன் பக்கம் தள்ளிவிட்டுத் தந்திரமாக நகர்ந்து கொண்டுள்ளார் அவர்.

சம்பந்தன் இன்றைய கூட்டத்துக்கு போவாரா என்பது தெரியவில்லை. போனாலும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் முட்டி மோதிப் பேசும் நிலையில் அவர் இல்லை என்பது ஓரளவுக்குத் தெரிந்ததுதான்.

சஜித், அனுரகுமார திஸநாயக்கா எல்லோரும் இன்றைய கூட்டத்துக்கு போகவில்லை. அதனால் இன்றைய கூட்டம் நடக்குமோ என்பதும் தெளிவில்லை.

நடந்தால் எதிர்க்கட்சிகள் தரப்பு அரசியல்வாதிகளின் பக்கத்தில் **'one man army'**யாக நிற்கப்போவது சுமந்திரன் மட்டும்தான்.

ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்துடனான ஏற்பாட்டின் அடிப்படையில் தனியார் துறையினரின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தில் ரணில் அரசு செய்த குளறுபடிகளுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் போட்டுப் பிடித்த சட்டவாதங்கள் பற்றிய அனுபவத்துடன், இன்றைய விவாதக் களத்தில் இறங்க சுமந்திரன் தயாராக இருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியம் விதித்த தரநிலை இலக்குகளைக் கூட இலங்கை அரசு இன்னமுமே எட்டாத நிலையில், அப்படியே சர்வதேச நாணய நிதியம் வெளிப்படையாகப் பேசாத பல விவரங்களை எல்லாம் அடுக்கி, ஒரு குற்றச்சாட்டுப் பட்டியலைச் சமர்ப்பிக்க சுமந்திரன் தரப்பு இன்று தயாராக இருப்பதாக தகவல்.

திட்டமிட்டபடி இன்றைய தினம் கூட்டம் நடக்குமானால், பல சுவாரஸ்யமான வாத – விவாதங்கள் வெளிப்படும் என எதிர்பார்க்கலாம்.

## துஷ்டனாக வாழ்ந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.

"வாரத்துக்கொரு கேள்வி" என்ற தமது பதிவில் நேற்றுத் தாம் வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

அந்தக் கேள்வி – பதில் விவரம் வருமாறு:–

**கேள்வி:-** வெளிநாட்டு – உள்நாட்டு சதியின் விளைவே தாம் பதவியிலிருந்து நீங்கியமை என்று முன்னைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறுகின்றாரே! உங்கள் கருத்து என்ன?

**பதில்:-** துஷ்டர்களைக் கண்டால் தூர விலகுவது நாம் காலம் காலமாக செய்து வரும் ஒரு செய்கையாகும். போர்க்காலத்தின் போதும் அரசியலில் ஈடுபட்ட காலத்தின் போதும் கோட்டாபய துஷ்டனாகவே வாழ்ந்து வந்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்ட போது, இராணுவ சிங்கள நண்பர்களுடன் எம்மவர் சிலர் பேச நேர்ந்தது. அவர்கள் கூறிய கூற்று அந்த காலகட்டத்தில் எனக்கு பாரிய அதிர்ச்சியைத் தந்தது. அரசின் கோரிக்கையின் பேரில் வெள்ளைக் கொடிகளைக் கையில் ஏந்தி சரணடைந்த தமிழ் மக்களை என்ன செய்ய வேண்டும் என்று முல்லைத்தீவு படையணியினர் வினவிய போது பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய சற்றும் சிந்தியாது "அவர்கள் யாவரையும் சுட்டுக் கொன்றுவிடுங்கள்" என்று கட்டளை இட்டார் என்று அந்த இராணுவ அதிகாரிகள் கூறினர்.

இராணுவத்தினர் கைவசம் அன்று இருந்த பல இடங்களில் இன்று இறந்தவர்களின் மனித எலும்புகளும் எலும்புக் கூடுகளும் நிலத்திலிருந்து வெளிவருகின்றன. உண்மையான சர்வதேச விசாரணை ஒன்று நடைபெற்றால் சரணாகதி அடைந்தவர்கள் எவ்வாறு, யாரின் கட்டளைக்கமைய காணாமல் போனார்கள் என்ற விடயம் வெளிவந்துவிடும்.

தமது வீழ்ச்சிக்குத் தமிழர்களையும் முஸ்லிம் மக்களையும் மறைமுகமாகக் குற்றஞ்சாட்டும் கோட்டாபய "அறகலய"வில் பங்கு பற்றியோர் 99 சதவிகிதமானோர் சிங்கள இளைஞர்களே என்பதை மறந்துவிடக்கூடாது.

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு நடைபெற முன், எவ்வளவு காலமாக, யாருடன் கூட்டு சேர்ந்து குறித்த சம்பவம் நடைபெற பதவியில் இருந்த சிலர் பிரயத்தனங்களில் ஈடுபட்டனர் என்பது ஒரு சர்வதேச விசாரணை நடந்தால் வெளிவந்துவிடும். இந்தச் சம்பவத்தால் அரசியல் இலாபம் பெற்ற சிங்கள நபர் யார் என்பதை விசாரணை எளிதாகக் காட்டிக் கொடுத்துவிடும். சர்வதேச விசாரணைகள் இங்கு நடைபெறக்கூடாது என்று இன்று பதவியில் உள்ளவர்கள் கூறுவது உண்மைகள் வெளிவந்துவிடாது தடுப்பதற்கே.

என் நண்பர் சட்டத்தரணியும் பத்திரிகையாளருமான லசந்த விக்கிரமதுங்க எவ்வாறு, ஏன் கொலை செய்யப்பட்டார், பின்னணியில் இருந்தவர்கள் யார் என்று சர்வதேச விசாரணை நடந்தால் எளிதில் கண்டுபிடித்துவிடுவார்கள். கோட்டாபயவின் பங்கு என்ன என்பதையும் சர்வதேச விசாரணை காட்டிக் கொடுத்துவிடும். வெளிநாட்டவர்கள் மற்றும் உள்நாட்டவர்கள் தமக்கெதிராகச் சதி செய்தார்களா என்பதை கோட்டாபய தன்னிடமே விசுவாசத்துடன் கேட்டால் தன் செயல்களே தனது வீழ்ச்சிக்குக் காரணம் என்பதைப் புரிந்து கொள்வார்.

ஆனால் "அறகலய" இளைஞர்,யுவதிகளை கிளர்ந்தெழச் செய்தது கோட்டாபயவின் முட்டாள்தனமான பொருளாதார நடவடிக்கைகளே. அதிகாரம் இருந்தால் எவர் அறிவுரையையும் பொருட்படுத்தாமல் முட்டாள்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்று உலகுக்கு எடுத்துக் காட்டியவர் கோட்டாபயவே.

இரசாயன உரங்களைத் தவிர்த்து இயற்கை உரத்தை எமது விவசாயிகள் பாவிக்க வேண்டும் என்பதில் எவரிடத்திலும் இரண்டாவது கருத்து ஒன்று இருக்கமுடியாது. ஆனால் சரியோ, பிழையோ செயற்கை உரங்களை நம்பியே விவசாயிகள் அண்மைக் காலங்களில் விவசாயம் செய்து வந்துள்ளார்கள். ஆகவே திடீரென செயற்கை உரத்தை வெளிநாட்டில் இருந்து வருவிப்பதைத் தடுத்தால் என்ன நடக்கும் என்று அவர் சிந்தித்துப் பார்த்திருக்க வேண்டும். சிந்தித்திருந்தால் வரும் இரண்டு அல்லது மூன்று வருடங்களின் பின் செயற்கை உரங்களை வருவிப்பதை நீக்க இருக்கின்றோம், அவற்றுக்குப் பதில் பலமான இயற்கை உரங்களை உருவாக்க இப்பொழுதிருந்தே ஆயத்தமாகுங்கள் என்று கூறியிருப்பார்.

மண்புழு உரம், சாணி உரம், காய்ந்த சருகு உரம் என்று பல விதமான இயற்கை உரங்கள் தற்போது தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பயிர்கள் கூடிய அறுவடையைத் தர எவ்வாறு, என்னவாறான இயற்கை உரங்கள் இனிப் பாவிக்கப்பட வேண்டும் என்று ஆராய்ந்து அவற்றை பெருவாரியாக உள்நாட்டில் தயாரிக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் போதிய அறிவிப்புடன் செயற்கை உரங்கள் வருவிப்பதை நிறுத்தியிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாது சிங்கள மக்களின் வயிற்றில் அடித்துவிட்டு சிறுபான்மையினரின் சதியே தமது வெளியேற்றம் என்று கூறுவது சிறுபிள்ளைத்தனமாகும்.

தனக்குத் தேர்தலில் உதவி புரிந்த பணக்காரக் குடும்பங்களுக்கு வரிவிலக்கு கிடைக்கும் வண்ணம் தமது நிதிக் கொள்கைகளை மாற்றியமை சிங்கள மக்களிடையே பலத்த வெறுப்பை ஏற்படுத்தியது. இவை சாதாரண சிங்களக் குடும்பங்களில் இருந்தவர்களுக்கு வெறுப்பையும் கோபத்தையும் உண்டாக்கின.

தமது வயிற்றில் அடிக்கப்பட்டதால் சிங்கள இளைஞர்கள் கோட்டாபயவுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்ததற்காக சிறுபான்மையினர் மீதும் வெளிநாட்டவர்கள் மீதும் சேறு பூசுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அடித்துத் துரத்தப்பட வேண்டிய ஒருவர் என்று சிங்கள மக்களால் அடையாளம் காணப்பட்ட ஒருவரே அவர்களால் விரட்டப்பட்டார்.

அவரின் குடும்பத்துக்குள்ளேயே சதிகாரர்கள் சிலர் இருந்திருக்கக்கூடும். அதனை அவர் ஆராய்ந்து பார்த்து தமது குடும்ப அங்கத்தவருடன் பேச வேண்டும். அதை விட்டு விட்டு "செல்லும் செல்லாததற்கு செட்டியார் இருக்கின்றார்" என்பது போன்று சிறுபான்மையினர் மீது சதிப் பழி போடுவது ஒரு ஜனாதிபதியாகப் பதவி வகித்த ஒருவருக்கு அழகல்ல.

துஷ்டர் ஒருவரை சிங்கள இளைஞர், யுவதிகள் பதவியில் இருந்து நீக்கினார்கள் என்பதுதான் உண்மை. அது சதி அல்ல. தண்டனை. மனிதப் படுகொலைகளில் ஈடுபட்டவர்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டும். அவ்வாறு நிறுத்தப்படுவது அவரின் இந்த நூல் தடுக்கும் என்று கோட்டாபய நினைத்தாரானால் மனோ கணேசன் கூறியமை போல் அவரைப் போல் வடிகட்டின முட்டாள் ஒருவர் இந்நாட்டில் இருக்க முடியாது.

# தென்னைகளில் பரவும் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுங்கள்!

## விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்பு

தென்னைகளில் பரவிவரும் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு தென்னைப் பயிர்ச்செய்கை சபைக்கு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார்.

தென்னை ஆராய்ச்சி நிறுவனம் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்தப் பரிந்துரைக்கப்பட்ட தேங்காய் எண்ணெய் மற்றும் சவர்க்காரத் தூள் கலவையை தெளிக்க ஏற்பாடு செய்துள்ளது என்று விவசாய அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் தென்னைப் பயிர்ச்செய்கையில் வெள்ளை ஈ அல்லது ஏதேனும் நோய் மற்றும் பூச்சிகளால் சேதம் ஏற்பட்டால், லுணுவில தென்னை அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள தென்னை பயிர்ச்செய்கைக்கான தேசிய அனர்த்த முகாமைத்துவசெயற்பாட்டுபிரிவை032-3135255 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு 1228 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் கன்னொருவ - தேசிய விவசாய தகவல் தொடர்பாடல் நிலையத்தின் 1920 என்ற இலக்கத்துக்கு அழைப்பதன் மூலம் வெள்ளை ஈ சேதம் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் வறட்சியான கால நிலையுடன் தென்னைச் செய்கையில் வெள்ளை ஈ சேதம் காணப்படுகிறது என்று தென்னை பயிர்ச்செய்கை சபை தெரிவித்துள்ளது.

புத்தளம் மாவட்டத்தில் தங்கொடுவ,



நாத்தாண்டிய, சிலாபம், முகுனுவடவன, ஆரியகம, பட்டுலுஓயா மற்றும் முந்தலம ஆகிய பிரதேசங்களில் வெள்ளை ஈக்களின் சேதம் காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, நாட்டின் ஏனைய பகுதிகளில் வெள்ளை ஈ நோய் உள்ளதா என்பதை ஆராயுமாறு பயிர்ச் செய்கையாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# புதுக்குடியிருப்பில் கேரளக் கஞ்சாவுடன் இராணுவ அதிகாரி உட்பட இருவர் கைது!

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் கேரளக் கஞ்சாவுடன் இராணுவ அதிகாரி ஒருவரையும் மற்றும் இளைஞர் ஒருவரையும் தாம் கைது செய்துள்ளனர் என்று புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவமானது புதுக்குடியிருப்பு - உடையார்கட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே இந்தச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தநிலையில் இந்தச் நபர்களிடம் இருந்து 10 கிராம் கஞ்சாவைப் பொலிஸார் மீட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

தேராவில் தேக்கங்காடு இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 40 வயதுடைய இராணுவ அதிகாரி ஒருவரும் உடையார்கட்டு தெற்கைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞருமே இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரையும் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரியின் முன்னிலையில் நிறுத்திய போது இருவரும் போதைப் பொருள் பாவனையில் ஈடுபட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது என்று சட்ட வைத்தியத் தகவல்கள் தெரிவித்துள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜனாதிபதியின் அழை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்படி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இதில் கலந்துகொள்ளவுள்ளார் என்றும் அவர் மேலும் கூறினார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இன்று திங்கட்கிழமை எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தக் கலந்தரையாடலுக்காக எதிர்க்கட்சிகளுக்கு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட்டுள்ள போதிலும், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் கலந்துகொள்வதில்லை எனத் தீர்மானித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உரிய அழைப்பை ஏற்று இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்கத் தீர்மானித்துள்ளது.

## 400 கிலோ கஞ்சா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கஞ்சா தமிழகத்தில் சிக்கியுள்ளது.

தொண்டி கடல் வழியாக நாட்டுப் படகில் இலங்கைக்குக் கடத்துவதற்காக மீமீசல் அருகே உள்ள இறால் பண்ணையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 400 கிலோ கஞ்சா மூட்டைகளை திருச்சி மத்திய நுண்ணறிவு பிரிவு சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்தக் கடத்தல் சம்பவத்தில் தொடர்புடைய எஸ்.பி பட்டினத்தைச் சேர்ந்த நபரைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

தமிழகம், இராமநாதபுரம் மாவட்டம் தொண்டி, எஸ் பி பட்டினம், தேவிபட்டினம், மரைக்காயர்பட்டினம், வேதாளை, தங்கச்சிமடம், மண்டபம், பாம்பன் உள்ளிட்ட பகுதிகள் இலங்கைக்கு மிக அருகே இருப்பதால் சமீப காலமாக இலங்கைக்குச் சட்டவிரோதமாக நாட்டு படகுகளில் கஞ்சா, கடல் அட்டை, சமையல் மஞ்சள், ஏலக்காய், கடல்குதிரை உள்ளிட்ட பொருள்கள் அதிக அளவு கடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் இரவு தொண்டியில் இருந்து நாட்டுப் படகில் கடல் வழியாக கஞ்சா மூட்டைகள் இலங்கைக்கு கடத்த இருப்பதாக திருச்சி மத்திய நுண்ணறிவு பிரிவு சுங்கத்துறைக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அதிகாரிகள் இராமநாதபுரம் மாவட்ட எல்லை ஓரம் உள்ள மீன் கம்பனிகள், இறால் பண்ணைகள் உள்ளிட்டவற்றைச் சோதனை செய்தனர்.

இதன்போது இறால் பண்ணை ஒன்றில் இலங்கைக்குக் கடத்துவதற்காகச் சட்டவிரோதமாகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 400 கிலோ எடை கொண்ட கஞ்சா மூட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட கஞ்சா இராமநாதபுரம் சுங்கத்துறை அலுவலகத்திற்கு எடுத்துச் சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். முதல் கட்ட விசாரணையில் எஸ்.பி பட்டினத்தைச் சேர்ந்த சுல்தான் என்பவருக்குச் சொந்தமான இறால் பண்ணையிலிருந்து இந்தக் கஞ்சா மூட்டைகள் எடுக்கப்பட்டன என்றும், மூன்று பேர் கொண்ட குழு நேற்றுமுன்தினம் இரவு இதனை நாட்டுப் படகில் இலங்கைக்குக் கடத்தத் திட்டமிட்டிருந்தனர் என்றும் தெரியவந்துள்ளது.

## நாட்டை முன்னேற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் பங்கேற்கும் முதலாவது பொதுக் கூட்டம் இதுவாகும். மைதானத்தில் கூடியிருந்த மக்களால் ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மக்கள் மத்தியில் சென்று அவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

ஜனாதிபதியாகப் பதவியேற்றது முதல், கட்சி பேதமின்றி அனைத்து தரப்பினரும் வழங்கிய ஆதரவுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, குறுகிய அரசியல் நலன்களை நிறைவேற்றாமல் நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இக்கட்டான காலத்திலும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் புரட்சியை ஏற்படுத்த அரசு செயற்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எப்பொழுதும் உண்மையைக் கூறி முன்னோக்கிச் செல்ல ஐக்கிய தேசியக் கட்சியால் முடியுமாக இருந்தது தொடர்பில் தாம் பெருமை கொள்கின்றார் என்று தெரிவித்த ஜனாதிபதி, நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டம் ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் இல்லை என்றும் தெரிவித்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## போலி வைத்தியர்களின் தர்பார்

நாட்டின் மருத்துவத் துறையில் நீண்ட காலமாக இருந்து வரும் ஒரு பிரச்சினை குறித்து இப்போது மீண்டும் பேசப்படுகின்றது.

நாடளாவிய ரீதியில் 40 ஆயிரத்துக்கு அதிகமான போலி வைத்தியர்கள் செயற்படுகின்றனர் என்றும் -

இதனால் தினசரி பல நூற்றுக்கணக்கான நோயாளர்கள் மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர் என்றும் -

மருத்துவ - சுகாதார துறையில் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை மருத்துவ கவுன்ஸிலில் பதிவு செய்யப்பட்ட 20 ஆயிரம் மருத்துவர்களும், ஆயுர்வேத மருத்துவ சபை மற்றும் ஹோமியோபதி கவுன்ஸில் ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்ட சுமார் 17 ஆயிரம் வைத்தியர்களும் இருந்தனர். அதேசமயம் அவர்களுக்கு இடையேயே அப்போதே முப்பதாயிரம் போலி வைத்தியர்கள் குள்ளநரிகளாக செயற்பட்டு வந்தனர் என்றும் கணக்கிடப்பட்டு வந்தது.

அந்தத் தொகை இப்போது 40 ஆயிரத்தைத் தாண்டி விட்டமை இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்த தகவலில் உறுதியாகின்றது.

பெரும்பாலும் பின்தங்கிய பிரதேசங்களில், தகுதி பெற்ற மருத்துவர்களோ, மருத்துவ வசதிகளோ இல்லாத தொலைதூர கிராமங்களில்தான் இந்தப் போலி வைத்தியர்களின் கைவரிசை கொடிகட்டி பறப்பதாகக் கூறப்படுகிறது. அவர்கள் ஆங்கில மருந்துகள், ஊசிகளைப் பரிந்துரைப்பது மட்டுமின்றி, பல்வேறு சமயங்களில் நிபுணத்துவ மருத்துவர்கள் போன்றும் காரியமாற்றுகின்றனராம்.

குறிப்பாக எலும்பு முறிவுகள், தீக்காயங்கள், கொப்புளங்கள், நோய்த் தொற்றுகள், விஷக் கடிகள், சட்டவிரோதக் கருக்கலைப்புகள் போன்றவற்றில் இவர்கள் நிபுணத்துவ மருத்துவர்கள் போல செயல்படுகின்றார்கள் என்ற உண்மைகள், தகவல்கள், புள்ளி விவரங்கள் அடங்கிய அறிக்கைகள் சுகாதார அமைச்சுக்குத் தாராளமாகக் கிடைத்து வருகின்றன.

இப்படி மருத்துவத் துறையில் ஊடுருவிப் பெரும் குற்றம் இழைக்கும் சுமார் நாற்பதாயிரம் போலி மருத்துவர்களைக் கண்டுபிடிக்க விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட இருக்கின்றன என்று அரச வைத்தியர் அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க மேலும் தெரிவித்திருக்கின்றார். இதற்காக பன்னிருவர் கொண்ட விசேட குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

பொருளாதார நெருக்கடியில் தவிக்கும் மக்களையே இந்தப் போலி வைத்தியர்கள் இலகுவாக இலக்கு வைக்கின்றனர். குறைந்த செலவில் விரைந்த தீர்வு என்ற பெயரில் தவறான மருந்துகளை இவர்கள் வழங்குகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

இந்தப் போலி வைத்தியர்களுக்கு உதவுவதற்கு என்றே நாடளாவிய ரீதியில் பல மருந்தகங்கள் இயங்குகின்றன என்றும் சுட்டப்படுகின்றது.

இத்தகைய மருந்தகங்களை அடையாளம் கண்டு அவற்றின் மருந்தக உரிமங்களை இரத்துச் செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இலங்கை மருத்துவ கவுன்ஸிலில் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள், ஆயுர்வேத சபை, ஹோமியோபதி கவுன்ஸில் போன்றவற்றில் அங்கீகாரம் பெற்ற வைத்தியர்களும் கடமையில் உள்ளனர். இவர்களைத் தவிர்த்தே ஏனைய போலி டாக்டர்களையும் குள்ளநரிகளையும் கண்டுபிடிக்க வேண்டும்.

அதற்கு முதலில் அங்கீகாரம் பெற்ற - தகைமை உடைய - உரிமத்தை சுவீகரித்துக் கொண்ட - வைத்தியர்கள் தொடர்பில் ஒரு சீரான கட்டமைப்புத் தகவல் தரவுகள், தகவல் வங்கி அவசியம்.

ஆகவே தகுதி பெற்ற - பதிவு செய்யப்பட்ட - மருத்துவர்களை, மருத்துவர்களின் உரிமங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு பொது கட்டமைப்பின்கீழ் கொண்டுவருவது மிகமிக அவசியம் எனச்சுட்டப்படுகின்றது.

எனினும், இது தொடர்பில் சுகாதார அமைச்சு பிரேரித்துள்ள பொதுத் திட்டத்தில் ஒன்றித்து - இணைந்து - செயல்படுவதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்திடமிருந்து இணக்கமான - ஆக்கபூர்வமான - பிரதிபலிப்பு இன்னும் கிட்டவில்லை என்று சுகாதார அமைச்சு வட்டாரங்கள் கூறுகின்றன.

குள்ளநரிகளை மடக்கிப் பிடிக்க வேண்டிய தரப்புகளிடையே குழப்பம் இருக்கும் என்றால் குள்ளநரிகள் பாடு கொண்டாட்டம்தானே....!

# இந்தியா டில்லியிலுள்ள கேஷ்பூர் பகுதியில் ஆழ்துளைக் கிணற்றுக்குள் வீழ்ந்த குழந்தை!

## மும்முரமாக நடக்கும் மீட்புப் பணிகள்

இந்தியாவில் டில்லியில் உள்ள கேஷ்பூர் பகுதியில் ஆழ்துளைக் கிணற்றுக்குள் குழந்தை ஒன்று தவறி விழுந்துள்ளது என்று அந்தப் பகுதியைச் சேர்ந்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்களின் கூற்றுப்படி, இந்தக் குழந்தை நேற்று (10) காலையில் ஆழ்துளைக் கிணற்றுக்குள் விழுந்துள்ளது என்று கூறப்படுகிறது.

டில்லியில் கேஷ்பூர் மண்டி பகுதியில் உள்ள டில்லி ஜல் போர்டு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் சுமார் 40-50 அடி ஆழமுள்ள ஆழ்துளைக் கிணற்றுக்குள்ளேயே குழந்தை தவறி விழுந்துள்ளது.

இந்த சம்பவம் குறித்து தகவலறிந்து விரைந்த டில்லி தீயணைப்பு வீரர்கள், தேசிய பேரிடர் மீட்புப் படை மற்றும் டில்லி பொலிஸார் குழந்தையை மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மீட்புப் பணியில் முதற் கட்டமாக ஆழ்துளைக் கிணற்றில் குழந்தை விழுந்த இடத்துக்கு இணையாக மற்றொரு பள்ளத்தைத் தோண்டி மீட்புப் பணியை தொடரவுள்ளது என்று கூறப்படுகிறது.

மேலும் மீட்புப்பணிகள் தீவிரமடைந்துள்ள நிலையில் குழந்தை தொடர்பான எந்த விதமான தகவல்களையும் பொலிஸார் குறிப்பிடவில்லை.



# போதைப் பொருள் சலனங்களிலிருந்து இளைஞர்கள் வலகி இருக்க வேண்டும்

## தமிழ்நாட்டின் நிலைமை தொடர்பில் ஆளுநர் ரவி தெரிவிப்பு



தமிழ்நாட்டிலும் மற்ற இடங்களிலும் சர்வதேச போதைப் பொருள் கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர்கள் மத்திய அமைப்புகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன் மூலம் நமது மாநிலத்தில் போதைப் பொருள்கள் பழக்கத்தில் உள்ளது. இது மோசமான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இளைஞர்கள் இதுபோன்ற சலனங்களில் இருந்து விலகி இருக்க வேண்டும் என்று ஆளுநர் ஆர்.என் ரவி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஆளுநர் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

சமீபத்தில் கணிசமான அளவில் போதைப் பொருள்கள் மற்றும் மனோவியல் பொருள்களின் பறிமுதல் நடவடிக்கைகள் மற்றும் அது தொடர்பாக தமிழ்நாட்டிலும் மற்ற இடங்களிலும் சர்வதேச போதைப் பொருள் கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர்கள் மத்திய அமைப்புகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். இது நமது மாநிலத்தில் போதைப் பொருள்கள் புழக்கத்தில் உள்ளதாக நிலவிய நமது அச்சங்களை உறுதிப்படுத்தியுள்ளது.

உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் படிக்கும் தங்களின் பிள்ளைகளின் நிலை குறித்து கவலைப்படும் பெற்றோர்கள், கடந்த ஓராண்டாக மாநிலத்தில் உள்ள கல்வி வளாகங்கள், பொழுதுபோக்கு மன்றங்கள் போன்றவற்றில் போதைப் பொருள்கள் புழக்கத்தில் இருப்பது குறித்த தங்களுடைய தீவிர கவலையை என்னிடம் பகிர்ந்து வந்தனர்.

மத்திய உளவுத்துறை, புலனாய்வு மற்றும் சட்ட அமலாக்க அமைப்புகள், சர்வதேச கடத்தல் கும்பலைப் பிடிக்கும் நடவடிக்கையில், நமது மாநிலத்தில் சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலில் முக்கிய மூளையாக ஈடுபட்டு வந்தவர்களை கண்டறிந்துள்ளன.

இந்தப் போதைப் பொருள்கள் மிகவும் அடிமையாக்கும் தன்மையையும் அழிவை ஏற்படுத்தக் கூடியனவும் ஆகும். இதை பரிசோதிக்காமல் விட்டால் விரைவில் அது நமது எதிர்கால தலைமுறையையே அழித்துவிடும். போதைப் பொருளுக்கு அடிமையாவது பல கொடூரமான குற்றங்களுக்கும் வழிவகுக்கிறது.

துல்லிய அவசர நடவடிக்கை உணர்வுடனும் மிகுந்த முன்னுரிமையுடனும் இந்த அச்சுறுத்தலைக் கையாள வேண்டும். மத்திய மற்றும் மாநில சட்ட அமுலாக்கல் அமைப்புகள், தங்கள் பணிகளை செய்ய வேண்டும். அதே வேளையில், நம் மாநிலத்தில் உள்ள பெற்றோர் மற்றும் கல்வி நிறுவன நிர்வாகத்தினர் இது போன்ற போதைப் பொருள்களுக்கு எதிராக எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களின் முதன்மை இலக்கு இளைஞர்கள் என்பதால், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் இதுபோன்ற துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகும் அறிகுறிகளைக் கொண்டிருக்கிறார்களா என்பதைக் கண்டறிய கூடுதல் விழிப்புடன் இருக்க வேண்டும்.

போதைப்பொருள் அச்சுறுத்தலுக்கு எதிராக அனைவரும் முழு ஒத்துழைப்பை நல்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.-என்றுள்ளது.

# மரவள்ளி கிழங்கு சாப்பிட்ட சிறுமி உயிரிழப்பு; 2 குழந்தைகள் வைத்தியசாலையில் அனுமதி!

தமிழகத்தில் உள்ள ஒரு கிராமத்தில் மரவள்ளி கிழங்கு சாப்பிட்ட சிறுமி உயிரிழந்த நிலையில் மேலும் 2 குழந்தைகள் வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் சிவகங்கையில் உள்ள தமராக்கி கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கிராமத்தில் வன்னிமுத்து - முத்தம்மாள் தம்பதியினருக்கு சுவாதி (13), ஸ்வேதா (12), வனிதா (10) ஆகிய மூன்று பெண் குழந்தைகள் உள்ளனர்.

இவர்களது தாய் முத்தம்மாள் தினக் கூலி வேலைக்கு செல்வது வழக்கம். மரவள்ளிக்கிழங்கு அறுவடை வேலைக்கு முத்தம்மாள் சென்று, வேலையை முடித்துவிட்டு வீட்டுக்கு வரும்போது மரவள்ளிக் கிழங்கை எடுத்து வந்துள்ளார்.

அதனை குழந்தைகளுக்கு சிப்ஸ் செய்து கொடுத்துள்ளார் என்று கூறப்படுகிறது. மேலும் மூவரும் அதைபட பச்சையாகவும் சாப்பிட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

மூவரும் உறங்கச் சென்ற நிலையில், இரவு ஒரு மணியளவில் திடீரென 2 குழந்தைகளுக்கும் உடல்நிலை சரியில்லாமல் அவதிப்பட்டுள்ளனர்.

அதில் ஸ்வேதா (12) என்ற சிறுமி வீட்டிலேயே உயிரிழந்துள்ளார்.

இதையடுத்து வனிதா மற்றும் சுவாதியை சிவகங்கை அரச மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

அங்கு அவர்களுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மரவள்ளிக்கிழங்கு சாப்பிட்ட சிறுமி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக சிவகங்கை பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காசா மக்கள் பட்டினிச் சாவு; உணவு அனுப்ப அமெ. திட்டம்!

## நிவாரணம் அனுப்பத் தற்காலிக துறைமுகம்!!



காசாவுக்கு நிவாரணப் பொருள்களை கொண்டு செல்வதற்காக அதன் கடலோரப் பகுதியில் தற்காலிக துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கு தனது இராணுவத்துக்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உத்தரவிட்டுள்ளார்.

காசாவில் தொடர்ந்து நடைபெற்று வரும் இஸ்ரேல் ஹமாஸ் போரினால் அங்குள்ள மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

அத்துடன், காசாவுக்கான உணவு, தண்ணீர், மருந்து மற்றும் பிற அத்தியாவசிய பொருள்கள் செல்லும் பாதையை இஸ்ரேல் மூடியது.

இந்த நிலையில், அங்கு கடுமையான உணவு பஞ்சம் ஏற்பட்டு மக்கள் பலர் பசி பட்டினியால் வாடி வருகின்றனர் என்பது தெரியவந்துள்ளது.

இருப்பினும், சார்வதேச நாடுகளின் முயற்சியில் அவ்வப்போது அந்தப் பகுதிக்கு நிவாரணப் பொருள்கள் கொண்டு செல்லப்பட்டாலும், தொடர் போரால் அந்தப் பகுதியில் உணவு உள்ளிட்ட பொருள்களுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.பேர் நிறுத்தம் மேற்கொள்ளப்படாவிட்டால் பஞ்சம் ஏற்பட்டு மிகப் பெரிய உயிரிழப்புகள் ஏற்படுமென ஐ.நா. தொடர்ந்து எச்சரித்து வந்த நிலையில் தற்போது 20 பேர் பட்டினியால் உயிரிழந்ததுள்ளனர் என்று காசா அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

அதனை தொடர்ந்து, அமெரிக்க அதிபர் ஜோ பைடன் காசாவுக்கு நிவாரணப் பொருள்களைக் கொண்டு செல்வதற்காக அதன் கடலோரப் பகுதியில் தற்காலிக துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பனாமா கால்வாயில் கடும் வறட்சியால் நெருக்கடி நிலையில் உலக வர்த்தகம்!

பனாமா கால்வாயின் நீர்மட்டம் குறைந்து வருவது உலக பொருளாதாரத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. என்று அதிகாரபூர்வ நீரியல் நிபுணரான நெல்சன் குவேரா தெரிவித்துள்ளார்.

தவிரவும், உலகில் இரண்டாவது பெரிய கடல் வர்த்தக மார்க்கமாக விளங்கும் பனாமா கால்வாய் வறண்டு போகும் நிலை உருவாகியுள்ளது என்று ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மாநாடு சமீபத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

இது தொடர்பாக பனாமா கால்வாயின் அதிகாரபூர்வ நீரியல் நிபுணரான நெல்சன் குவேரா மேலும் தெரிவிக்கையில்,

"ஒவ்வொரு ஆண்டும் கோடை காலங்களில் கால்வாயின் நீர்மட்டம் குறைவது இயல்பு என்றாலும், இன்னும் கோடை காலம் கூட ஆரம்பிக்காத நிலையில், இப்போதே ஒரு காடளவுக்கான மரங்கள் நீர் மட்டத்துக்கு மேலே தென்படுகின்றன.

மேலும், காதுன் ஏரியின் நீர் மட்டம் 5 அடி குறைந்திருக்கிறது, கால்வாயின் 110 வருட வரலாற்றில் இரண்டாவது முறையாக குறைந்த மழையும், வானிலையும் இந்த வறட்சிக்குக் காரணமாக அமைந்திருக்கின்றன.

கடந்த ஒக்ரோபர் (2023) மாதம்தான் முதன்முறையாக கால்வாய் வறண்டது. அதனைத் தொடர்ந்து, தற்போது இயல்பைவிட 41 சதவிகிதம் குறைவாக மழை பொழிந்திருக்கிறது. இதனால், அமெரிக்க – பசிபிக் வழித்தடத்தில், 270 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வர்த்தகத்துக்கு சிக்கல் ஏற்பட்டிருக்கிறது.

அதுமாத்திரமன்றி தற்போது, ஒரு நாளைக்கு கால்வாயைக் கடக்கும் கப்பல்களின் எண்ணிக்கை 36 இலிருந்து 24 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு கப்பலும் குறைந்தளவு சரக்குகளையே கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. இது உலக வர்த்தகத்தில் பெரும் சிக்கலாக மாறியிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், பனாமா கால்வாய் நிர்வாகம்தான், அந்த நாட்டின் பாதி மக்கள் தொகைக்கு குடி தண்ணீர் விநியோகம் செய்து வருகிறது. எனவே, இதனால், அந்தப் பகுதி மக்களுக்கு இந்த வறட்சி தொடர் தண்ணீர் சிக்கலை ஏற்படுத்தும்.– என்று தெரிவித்துள்ளார்.



# மட்டக்களப்பில் மகளிர் தின நிகழ்வு!



(பழுவூரான்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் மட்டக்களப்பு கல்லடி ஸ்ரீ முருகன் விளையாட்டு மைதானத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான மகளிர் தின நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

ஆளுநர் செந்தில் தொண்டமான் தேசிய கொடியை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் இந்தியாவின் பாரத் பயோடெக் இன்டர்நேஷனல் லிமிடெட்டின் இணை நிறுவனரும், இயக்குனருமான திருமதி சுசித்ரா எல்ல பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

கொவிட் காலப்பகுதியில் கொவிட் தடுப்பூசியைக் கண்டுபிடித்து, 600 பில்லியன் கொவிட் தடுப்பூசிகளை தயாரித்து மக்கள் உயிரை காத்த உன்னத பெண்ணான திருமதி சுசித்ரா எல்ல கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உள்ளிட்ட சிறப்பு அதிதிகளால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மேலும் மட்டக்களப்பில் கல்வி துறையில் சாதித்த பெண்கள், கிராமிய அபிவிருத்தி சங்கங்கள், பெண்கள் அமைப்புகள் போன்றவை ஊடாக பல சாதனைகளை நிலைநாட்டிய பெண்களுக்கும் இதன் போது விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் கலாசார நிகழ்வுகள், சாதனை படைத்த பெண்களை கௌரவிக்கும் முகமாக விருது வழங்கும் நிகழ்வுகள் என்பனவும் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஜஸ்டீனா முரளிதரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், அலிசாஹீர் மௌலானா, ஆளுநரின் செயலாளர், கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பணிப்பாளர்கள் மற்றும் அரச திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், மகளிர் அமைப்புக்களின் அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.



# திருகோணமலையில் மகளிர் தின நிகழ்வு!

(ஏ.எச்.ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் திருகோணமலை திருக்கோணேஸ்வரா இந்து கல்லூரி மைதானத்தில் மகளிர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

ஆளுநர் செந்தில் தொண்டமானால் தேசிய கொடி ஏற்றப்பட்டு இந் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இந்தியாவின் பாரத் பயோடெக் இன்டர்நேஷனல் லிமிடெட்டின் இணை நிறுவனரும் இயக்குனருமான திருமதி சுசித்ரா எல்ல அவர்கள் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

காலப்பகுதியில், 600 பில்லியன் கொவிட் தடுப்பூசிகளை தயாரித்து மக்கள் உயிரை காத்த உன்னத பெண்ணான திருமதி சுசித்ரா எல்லவை கௌரவிக்கும் முகமாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் 'Worlds Most Powerful Woman' விருது வழங்கி வைக்கப்பட்டதுடன்,1880 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மலையக பெண் ஒருவர் தேயிலை பறிக்கும் பொழுது எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் திருமதி சுசித்ரா எல்லவுக்கு அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் திருகோணமலையில் கல்வி துறையில் சாதித்த பெண்கள் மற்றும் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், பெண்கள் அமைப்புகள் போன்றவை ஊடாக பல சாதனைகளை நிலை நாட்டிய பெண்களுக்கும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேலும் கலாசார நிகழ்வுகள், சாதனை படைத்த பெண்களை கௌரவிக்கும் முகமாக விருது வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கபில நுவான் அத்துகோரல, எம்.எஸ். தௌஃபீக், பிரதம செயலாளர் ஆர்.என்.பி.எஸ். ரத்நாயக்க,ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதநாயக்க,அரசாங்க அதிபர் மற்றும் அரச உத்தியோகஸ்தர்கள் கலந்துக் கொண்டனர்.













# தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் மகளிர் தின நிகழ்வு

(ந.லோகதயாளன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்ட மாதர் முன்னணியினரின் ஏற்பாட்டில் 'பன்னாட்டு மகளிர் நாள்- 2024' நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

கட்சியின் கிளிநொச்சி மாவட்ட மாதர் முன்னணியின் தலைவி முறாளினி தினேஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றின் சட்டவாளர் திருமதி.விஜயராணி சதீஸ்குமார் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டிருந்தார். தமிழரசுக் கட்சியின் பிரமுகர்களான நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நாடாளுமன்ற மேனாள் உறுப்பினர்கள் ஈஸ்வரபாதம் சரவணபவன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் மதினி நெல்சன், சசிகலா ரவிராஜ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, முன்னாள் போராளியும் கரைச்சி பிரதேச சபையின் மேனாள் உறுப்பினருமான லலித குமாரி சத்தியமூர்த்தி அவர்களின் அரசியல், சமூகப் பணிகளைப் பாராட்டி 'மண்ணின் மாதவம் -2024' என்னும் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.











# இன்றைய ராசி பலன்கள் - 11.03.2024




பொழுது போக்கு நிகழ்ச்சிகள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.பாடல்கள் கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணிச்சூழல் கடினமாக இருப்பதாக உணர்வீர்கள்.கடினமான வேலை செய்ய வேண்டியிருப்பதன் காரணமாக மகிழ்ச்சியின்றி காணப்படுவீர்கள்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.உங்கள் மனதில் உள்ள குழப்பம் உங்கள் மகிழ்ச்சியை தடுக்கும்.

இன்று சீரற்ற பணப்புழக்கம் காணப்படும்.உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நிலைமை காணப்படாது.

நீங்கள் தியானம் மேற்கொள்வதன் மூலம் மனதை அமைதியாகவும் ஓய்வாகவும் வைத்துக் கொள்ள முடியும்




இன்று லாபகரமான நாளாக இருக்கும். அக்கம் பக்கத்தினரின் ஆதரவு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.இன்று நல்ல விஷயங்களை செய்வீர்கள்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.அவர்கள் உங்கள் பணிகளைப் பாராட்டுவார்கள்.உங்கள் திறமைகள் மதிக்கப்படும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

உங்களுக்கு தொலைதூரத்திலிருந்து பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. இந்தப் பணம் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் தேக ஆரோக்கியம் பற்றி கவலைப்படத் தேவையில்லை.சிறப்பாக இருக்கும்.




உங்களுக்கான சரியான வழியை தேர்ந்தெடுக்க நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் திறமையாக திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

மேலதிகாரிகளுடன் சச்சரவு ஏற்பட வாய்ப்புள்ளது. அவர்களிடம் து நடந்து கொள்வதன் மூலம் சச்சரவுகளை தவிர்க்கலாம்.

உங்கள் துணையிடம் வன்மையாக நடந்து கொள்வதை தவிர்க்கவும்.உங்கள் துணையிடம் நல்லுறவை தக்க வைத்துக்கொள்ள முயலுங்கள்.

இன்று பணவரவிற்கு சாதகமான சூழ்நிலை அமையாது.நீங்கள் பணத்தை சேமிக்க வேண்டும்.பணத்தை பத்திரமாக பாதுகாப்பாக கையாண்டால் பண இழப்பை தவிர்க்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




முறையான திட்டமிடல் மூலம் கடினமான விஷயங்களையும் எளிதில் கையாளலாம்.

நீங்கள் முறையாக பணிகளை ஆற்ற இயலாது.உங்கள் பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சி குறைந்து காணப்படும்.இன்று உங்களால் நல்லிணக்கத்தை பராமரிக்க இயலாது.

ஆன்மிக காரியங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.இது உங்களுக்கு ஆறதலைத் தரும். பயணங்களால் செலவுகள் ஏற்படும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.தோள்களில் வலிகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைவதற்கு அதைரியம் தடையாக இருக்கும்.

பணியில் கவனம் செலுத்த முடியாதபடி பதற்றம் காணப்படும். அமைதியாக பணிகளை மேற்கொண்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள் துணையுடனான கருத்து வேறுபாடு காரணமாக உறவில் அமைதியின்மை காணப்படும். இதனை சமாளிக்க வேண்டும்.

எதிர்பாராத செலவினங்கள் காணப்படும். உங்கள் நிதியை கவனமாகக் கையாள வேண்டும்.

நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினை காணப்படும். ஓய்வெடுக்க நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் மன ஆறுதலும் வெற்றியும் கிட்டும். இன்று வெற்றி காண யோசித்து செயல்பட வேண்டும்.

பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பணியில் கவனம் செலுத்த உங்கள் மனதில் உள்ள தேவையற்ற எண்ணங்களை நீக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவில் அமைதியின்மை காணப்படும். உங்கள் துணையுடன் அன்பாக நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று வரவு, செலவு இரண்டும் காணப்படும். இன்று அதிக பண வரவுக்கான சாதகமான நாள் அல்ல.

அதிக உடல் உழைப்பு காரணமாக கால் வலி ஏற்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நேர்மறை எண்ணங்களுடனான அணுகுமுறை கொள்ள வேண்டும்.

கவனக் குறைவு காரணமாக பணியில் சில தவறுகளை நீங்கள் செய்ய நேரலாம். உங்கள் பொறுப்புகளை அறிந்து நடந்துகொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பாக மனம் திறந்து பேசுங்கள். இதனால் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

செலவுகள் அதிகரிக்கும். வீணான செலவுகள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

சளி மற்றும் இருமல் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவு வகைகளை மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும்.




இன்று நீங்கள் தேவைகளை அறிந்து நடந்து கொள்வீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். உங்களின் சிறிய திட்டம் பெரிய வெற்றிக்கு வழிகாட்டும்.

உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள். உங்களிடம் இன்று ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும்.

உங்கள் துணையுடன் தரமான நேரங்களை செலவழிப்பீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலை காணப்படும். இன்று பயனுள்ள சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது. இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.03.2024




இன்று நீங்கள் பதற்றம் நிறைந்து காணப்படுவீர்கள். இது உங்கள் பேச்சில் வெளிப்படும். பிரார்த்தனை மற்றும் மந்திர ஜெபங்கள் மன ஆறுதலை அளிக்கும்.

பணியில் கூடுதல்பொறுப்புகள் சுமக்க நேரும். வேலை சம்பந்தமான பயணம் காணப்படும். இன்று உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி பணிகளைக் கையாள வேண்டும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க அகந்தைப் போக்கை கவனமாகக் கையாள வேண்டும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக இருக்கும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




அதிக சிந்தனைகள் காரணமாக மனதில் குழப்பம் ஏற்படலாம். இன்று வெற்றிகள் காண கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய முடியாதபடி சில தடைகள் ஏற்படும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.பணியிடத்தில் கடினமான சூழ்நிலையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் குறைந்த அளவு பேச்சு வைத்துக் கொள்ளுங்கள். உறவில் அமைதியின்மை ஏற்படாமல் இருக்க இது மிகவும் அவசியம்.

போதிய பணம் கையில் இருந்தாலும் அதனை நீங்கள் பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்ய இயலாது. வீண் செலவு ஏற்படும்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சிறப்பாக வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிக்கும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் அணுகுமுறையில் நம்பிக்கை காணப்படும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் திறமையை பயன்படுத்தி நன்மை அடைவீர்கள் மற்றும் இலக்குகளை குறித்தநேரத்தில் அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறப்பாக நேரத்தை செலவிடுவீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு சென்று மகிழும் வாய்ப்பு உள்ளது.

சிறு கடன் வகையில் இன்று பண வரவு ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள போதிய அளவு பணம் காணப்படும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியம் மற்றும் திடகாத்திரம் பராமரிப்பீர்கள்.




திர்மறை எண்ணங்கள் உங்கள் நம்பிக்கையை குலைக்கும். நீங்கள் நம்பிக்கை உணர்வை மேற்கொள்ள வேண்டும்.

மந்தமான சூழ்நிலை காணப்படும். உங்கள் செயல்திறன் மூலம் இந்த நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக்கொள்ளலாம்.

உங்கள் துணையின் நடத்தை உங்களை உணர்சி வசப்பட வைக்கும். இது குடும்ப சூழ்நிலையின் மகிழ்ச்சியை குறைக்கும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அது மகிழ்ச்சிகரமாக இருக்கது. உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும். நிதிநிலையில் ஏற்றத்தாழ்வுகளை சந்திப்பீர்கள்.

பதற்றமும் பேரார்வமும் ஆரோக்கியத்துக்கு உகந்ததல்ல. இத்தகைய உணர்வுகளை சமாளியுங்கள்.











# 22 வரையில் தமிழக மீனவர்களுக்கும் விளக்கமறியல்

(ந.லோகதயாளன்)

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன்பிடித்தமைக்காகக் கைதான இந்திய மீனவர்களை வரும் 22ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

நெடுந்தீவு கடற்பரப்பிற்குள் 3 படகுகளில் எல்லை தாண்டிய மீன் பிடியில் ஈடுபட்ட 22 இந்திய மீனவர்களும் நேற்று அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட 22 இந்திய மீனவர்களும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

22 இந்திய மீனவர்களையும் மாரச் 22 வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

கைது செய்யப்பட்ட 22 இந்திய மீனவர்களில் 7 பேர் ஜெகதாப்பட்டிணத்தையும், 15 பேர் பாண்டிச்சேரியையும் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.







# கிண்ணியா மத்திய கல்லூரிக்கு பாடசாலை பஸ் வழங்கிய சஜித்!



(கிண்ணியா நிருபர்)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் கிண்ணியா மத்திய கல்லூரிக்கு பஸ் ஒன்று வழங்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் பிரபஞ்சம் வேலை திட்டத்தின் கீழ் கிண்ணியா மத்திய கல்லூரிக்கு நேற்று இந்த பஸ் வழங்கி வைக்கப்பட்டது.

கல்லூரியின் அதிபர் ஏ.எச்.எம்.நஜாத் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், கல்வி அதிகாரிகள், பிரதேச செயலாளர் பிரிவின் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கல்லூரிக்கு நீண்டகால தேவையாக இருந்த பஸ், நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் வேண்டுகோளுககு இணங்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸாவால் வழங்கப்பட்டது.




# வெடுக்குநாறியில் நடந்த அடாவடித்தனத்தை ஆட்சேபித்து மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்!

**(கனகராசா சரவணன் )**

வவுனியா வெடுக்குநாறிமலை ஆலையத்தில் வழிபட சென்ற மக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட அடாவடித்தனத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் பொலிசாரைக் கண்டித்தும் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் முன்னால் நேற்று ஞாயிற்றுக்கிழமை பொது மக்கள் கண்ட ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்புப் பொது அமைப்புக்கள் இணைந்து பொலிஸாரின் அடாவடித்தனத்தை ஆட்சேபித்து எதிர்ப்பு ஆர்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்தன. இதனையடுத்து நேற்றுக் காலை 10 மணிக்கு காந்தி பூங்காவிற்கு முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், சீ.யோகேஸ்வரன், பா.அரியநேந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேசிய அமைப்பாளர் த.சுரேஸ், மனித உரிடை செயற்பாட்டாளர்கள், இந்து, கிறிஸ்தவ மத குருமார், கட்சி ஆதரவாளர்கள் உட்பட நூாற்றுக்கு மேற்பட்டோர் ஒன்று கூடினர்.

இதனையடுத்து அவர்கள் “தடுக்காதே, தடுக்காதே! சிவ வழிபாட்டை தடுக்காதே!“, “சிவராத்திரி நாளில் சிங்கள அடக்குமுறை!“, “மனிதத்தை மிதிக்காதே!“, “மத உரிமையை தடுக்காதே!“, “தமிழ் அமைச்சர்களே வெடுக்குநாறி, மயிலத்தமடு நிலங்களைவ விற்று விட்டீர்களா?“, “சிவபூசைக்குள் காக்கி கும்பல்கள் ஏன்?“, “பொலிஸாரின் அடக்கு முறையை சர்வதேசமே விசாரி!“ போன்ற சுலோகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்கள் எழுப்பியவாறும் அரசையும் பொலிஸாரையும் கண்டித்து அங்கிருந்து ஆர்பாட்ட ஊர்வலமாக நகர் மணிக்கூட்டு கோபுர வீதி சுற்றுவட்டத்தை சுற்றி மீண்டும் காந்தி பூங்காவை சென்றடைந்தனர். ஆர்பாட்டத்தில் சுமார் ஒரு மணித்தியாலம் ஈடுபட்ட பின்னர் ஆர்ப்பாட்டகாரர்கள் அங்கிருந்து விலகிச் சென்றனர்.






# மதத்தின் பெயரால் மனிதம் சாவதா? இந்து மத பீடத்தின் தலைவர் விசனம்

## வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் ஆலய சம்பவத்தை கண்டிக்கின்றார் சிவஸ்ரீ மஹா தர்மகுமார குருக்கள்

(மன்னார் நிருபர்)

வெடுக்குநாறிஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் மஹா சிவராத்திரி தினத்தன்று சைவ சமய மக்களின் வழிபாட்டு உரிமைகள், புனித தன்மைகள் மீறப்பட்டமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். மதத்தின் பெயரால் மனிதம் செத்து விடக் கூடாது - என மன்னார் இந்து மத பீடத்தின் தலைவர் கலாநிதி சிவஸ்ரீ மஹா தர்மகுமாரக் குருக்கள் தெரிவித்தார்.

வெடுக்கு நாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் சைவ சமய மக்களின் வழிபாட்டு உரிமைகள் புனித தன்மைகள் மீறப்பட்டமையினை குறித்து நேற்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேசுவரர் கோவில் மகா சிவராத்திரி பூசையின் போது மேற்கொள்ளப்பட்ட சம்பவங்கள் ஒட்டு மொத்த இந்து சமூகத்தையும் மிகுந்த மன வேதனைக்கு உள்ளாக்கி இருக்கின்றன.



சைவர்களின் வழிபாட்டு உரிமை மிகப் புனிதமான விரத நாளில் அப்பட்டமாக மறுக்கப்பட்டு, மிக மோசமாக சைவ சமய விழுமியங்களை - புனித சடங்குகளை - அவமதிக்கும் சம்பவங்கள் அரங்கேறியிருக்கின்றன.

சைவ சமயத்தின் புனிததன்மையைச் சீரழிக்கும் இந்தச் செயல்கள் மிகப் பாரதூரமானவை. இச்செயல் சைவத்தமிழர்களின் மனதை மிகவும் காயப்படுத்தியுள்ளது.

இச் செயற்பாடு அடிப்படை வழிபாட்டு உரிமை மீறும் நடவடிக்கை என்பதை சைவ உலகிற்கும் சொல்ல வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

உலகம் பூராகவும் உள்ள சைவர்களின் மிக உன்னதமான முதன்மையான விரதம் மஹா சிவராத்திரி ஆகும்.

யுத்தம் முடிந்து சர்வமதங்களும் இப்போது தான் புரிந்துணர்வுடன் ஒன்றாக இணைந்து பயணிக்கும் வேளையில் மீண்டும் ஒரு பிளவினை உருவாக்கியிருக்கும் இச் செயல் மத நல்லினக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கும் செயலாகவே நாம் பார்க்கின்றோம்.

அந்த வகையில் இந்த சிவராத்திரி தினத்தில் தொன்று தொட்டு தமிழ்ச் சைவர்கள் வழிபட்டு வரும் ஆதி சிவன் கோவிலில் நடைபெற்ற மோசமான சம்பங்களை - அராஜகங்களை - நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். - என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# அம்பாறையில் ரூ.11 லட்சம் பெறுமதியான கடத்தப்பட்ட சிகரெட் பெட்டிகள் மீட்பு!

## பஸ் நிலையத்தில் அதிரடிப்படை நடவடிக்கை

கடல் மார்க்கமாக நாட்டுக்குக் கடத்தப்பட்டவை எனச் சந்தேகிக்கப்படும் 11 லட்சம் ரூபா பெறுமதியான போலிச் சிகரெட்டுகள் அம்பாறை பஸ் நிலையத்தில் இருந்து பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் அம்பாறை பஸ் நிலையத்தில் விற்பனையாளர்கள் மற்றும் விற்பனை நிலையங்களை அதிரடிப்படையினர் சோதனையிட்டுள்ளனர்.

இதையடுத்து, அங்கு இலங்கையில் விற்பனை மற்றும் நுகர்வு தடை செய்யப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளின் 115 அட்டைப் பெட்டிகள் கண்டு பிடிக்கப்பட்டன என்று அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவிக்கையில், 115 அட்டைப் பெட்டி சிகரெட்டுகளில் 1150 பாக்கெட்டுகள் இருந்தன. அவை ஒவ்வொன்றும் 50 ரூபா மதிப்புள்ள 23,000 குச்சிகள் பொதி செய்யப்பட்டிருந்தன. இவ்வாறு மீட்கப்பட்டவை சட்டவிரோத சிகரெட்டுகளே என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில் இந்தக் கடத்தல் சம்பவத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த நபர்கள் பிம்புரத்தேவ மற்றும் மொனராகலை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும், அம்பாறை விசேட அதிரடிப்படை முகாமில் இருந்து வந்த பொலிஸார் சந்தேக நபர்களை மேலதிக விசாரணைகளுக்காக அம்பாறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வெளிநாடுகளில் உள்ள 600 குற்றவாளிகளை இலங்கைக்குக் கூட்டிவர விசேட நடவடிக்கை

நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் உள்ள, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் உறுப்பினர்கள் அறுநூறு பேரை மீண்டும் இலங்கைக்கு அழைத்துவர முன்னெப்போதும் இல்லாத விசேட வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு இராஜதந்திர மட்டத்திலும், தூதுவர் மட்டத்திலும் கருத்துக்கள் பரிமாறப்பட்டு வருகின்றன என்றும் அது வெற்றியடைந்துள்ளது என்றும் குறிப்பிடப்படுகின்றது.

போதைப் பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலகச் செயற்பாடுகளில் ஈடுபடும் எந்தவொரு குற்றவாளியும் டுபாய் உள்ளிட்ட பிற நாடுகளுக்குத் தப்பிச் செல்ல முடியாத வகையில் நாட்டில் பாதுகாப்பு வலையமைப்பை நிலை நிறுத்துவதற்குப் பாதுகாப்பு அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை, பலர் இந்த நாட்டில் குற்றச் செயல்களில் ஈடுபட்டு மிக இலகுவாக டுபாய் மற்றும் இந்தியாவுக்குத் தப்பிச் செல்கின்றனர். இந்த நிலையில் அவர்கள் அந்த நாடுகளுக்குள் நுழைவதைத் தடுப்பதில் அதிகாரிகள் கவனம் செலுத்தியுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# தலைமறைவாகி இருந்த சந்தேக நபர் மூன்று வருடங்களின் பின்னர் கைது!

மட்டக்களப்பில் தலைமறைவாகி இருந்த சந்தேக நபர் ஒருவர் 3 வருடங்களின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பில் 2 வழக்குகள் தொடர்பாக நீதிமன்றத்தால் திறந்த பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட நிலையில் தலைமறைவாகியிருந்த நபரே நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டு ஜெயந்திபுரத்தைச் சேர்ந்த ஆண் ஒருவர் கடந்த 2020 ஆம் ஆண்டு சட்ட விரோதமாக கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு சம்பவங்களில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு பிணையில் வெளிவந்திருந்தார்.

அதனையடுத்து, இவர் நீதிமன்ற வழக்குக்கு முன்னிலையாகாமல் கடந்த 3 வருடங்களாகத் தலைமறைவாகிய நிலையில், அவருக்குத் திறந்த பிடியாணையை நீதிமன்றம் பிறப்பித்திருந்தது.

இந்த நிலையில், கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள பேத்தாளை கடற்கரை பகுதியில் குடியேறி இருந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவ தினமான நேற்றுக் காலை அந்தப் பகுதி கடற்கரையில் மாறுவேடத்தில் கண்காணிப்பில் ஈடுபட்ட பொலிஸார் 3 வருடமாக தலைமறைவாகியிருந்த நபரை கைது செய்துள்ளனர்.